ISSN 2792-1026

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

ஐந்தாவது அகவையை நோக்கிய பயணத்தில்...

www.magazine.skytamilnews.com skytamil.lk@gmail.com Thuninthelu Magazine

மாதந்தோறும் | இதழ் - 45 | நவம்பர் - டிசம்பர் 2025

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙඩ්
REGISTERED UNDER THE MINISTRY OF MASS MEDIA






கல்விக்கான கருவியாக உருவான இணையம் இப்போது பல மாணவர்களின் சீர்கேட்டிற்கான வாயிலாக மாறி வருகிறது



சுற்றுலா பயணிகளை அதிகம் கவரும் தெமதுர ஒன்பது வளைவு புகையிரதப் பாலம்



தனது கனவுகளை நனவாக்க துடிப்போடு நகரும் ஓவியர் வெற்றி ஜதிஸ்குமார்



உன்னிச்சை இருநூறுவில் – வரலாறும் மக்கள் எதிர்நோக்கும் சவால்களும்



பேசும் பேனாக்கள்

நூல் :- இப்படியும் ஒரு காலமிருந்தது
நூல் :- கறுப்பி (குறுநாவல்)

## கலாபூஷணம் இலக்கிய வித்தகர் திருமதி.மாஜிதா தவ்பீக்

அவர்களுடனான நேர்காணல்



ULTIMATE RESTAURANT

Next to Rawdat Al Khail Health Center,
B Ring Road, Doha - QATAR
+974 7731 2000 / +974 444 210

sky தமிழ்
Media Network

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවෙට්) ලිමිටෙඩ්
REGISTERED UNDER THE MINISTRY OF MASS MEDIA



**ஜே.எம்.பாஸித்**
ஸ்தாபக பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை



பொது முகாமையாளர்
ஹுபைப் முஸம்மில்



பிரதி முகாமையாளர்
அஸ்ரி இப்னு அமீர்



பிரதம ஆசிரியர்
ஹப்ஸா பஹுமீர்

## ஆலோசகர்கள் :

புரவலர் ஹாசிம் உமர்
தெ. செந்தில்வேலவர் – பிரதம ஆசிரியர் தினகரன்
கலாபூஷணம் நூருல் அமின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (நளீமி) – கத்தார்
மொஹமட் சாலிஹீன் – சிரேஸ்ட வானிலை அதிகாரி
றியாத் ஏ மஜீத் – சிரேஸ்ட ஊடகவியலாளர்

# துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

### நிர்வாக குழு:
ஜபீர் எம் மஹ்ரூப் – பிரதி முகாமையாளர், ஸ்கை தமிழ்
ஆஷிகா பர்சான் – பிரதி முகாமையாளர், ஸ்கை லங்கா

### பிரதம ஆசிரியர்:
ஹப்ஸா பஹுமீர் – துணிந்தெழு சஞ்சிகை

### இணையாசிரியர்கள்:
எம்.எஸ்.எம்.ஸாகிர் – சாய்ந்தமருது
குலசிங்கம் கிலசன் – கல்முனை
முனீரா வாஹித் – பதுளை
ஜவ்சன் அஹமட் – மருதமுனை

### ஆசிரியர் குழு உறுப்பினர்கள் :
மஜினா உமறு லெவ்வை – மாவடிப்பள்ளி
ஏ.எம். கஸ்பியா வீவி – கல்முனை
பௌஷில் ஷிப்னா – ஏறாவூர்
றிஹானா இஷாக் – கம்பளை
மொஹமட் நிப்ராஸ் – வாழைச்சேனை
எம்.பஹ்த் ஜுனைட் – காத்தான்குடி
றுக்ஷானா யஹியா – பாணந்துறை
ஹஸீனா முன்ஸிர் – கத்தார்
பாத்திமா பாதுஷா – கண்டி
ஷிமாம் முஸ்தாக் – அக்கரைப்பற்று
பாத்திமா அஸ்ரிபா – காவத்தமுனை
சி.கற்பஹாசினி – இரத்தினபுரி
பிரிந்தா புஷ்பாகரன் – களுவாஞ்சிக்குடி
எம்.எச்.எம். ஷிப்கான் – பாலமுனை

### வடிவமைப்பாளர்கள்:
ஏ.எச். முஹம்மட் ஹாரீஸ் – அம்பாறை

### இணையத்தளம் மற்றும் சமூக வலைதளம் பொறுப்பாளர்:
அஸ்ரி இப்னு அமீர் – அட்டாளைச்சேனை
ஜவ்சன் அஹமட் – மருதமுனை
எம்.எச்.எம். ஷிப்கான் – பாலமுனை

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.

+97431060249 | 0757000791 skytamil.lk@gmail.com

https://magazine.skytamilnews.com

# நவீன காலத்தில் வாசிப்பின் முக்கியத்துவம்

இன்றைய வேகமான உலகில், அறிவு நம் கைகளில் இருந்தாலும் அதை எடுத்துப் படிக்கும் விரல்கள் மட்டும் மெதுவாக மாய்ந்து கொண்டு இருக்கின்றன.

வாசிப்புப் பழக்கம், எங்கள் சமூகத்தின் ஒரு சிறந்த அடையாளமாகும். இன்று ஒரு அரிய கலைப்பொருளாகிப் போய்விட்டது. தகவல் பெருக்கெடுத்து பாயும் இந்த டிஜிட்டல் யுகத்தில், படிப்பது என்ற பழக்கத்தை பலர் “தேவையற்ற சுமை” எனக் கருதி தள்ளி வைக்கின்றனர். இது நம்முடைய காலத்தின் மிகப் பெரிய பிழை மட்டுமல்ல எதிர்கால தலைமுறைக்கு நாம் திணிக்கும் அமைதியான அபாயம் என்பது எம்மில் பல பேர் அறிவதில்லை.

தொழில்நுட்ப முன்னேற்றம் நம் வாழ்க்கையை எளிதாக்கியதோடு, வாசிப்பு உலகத்தை அமைதியாக பின்னுக்குத் தள்ளுகிறது. சில நொடிகளில் வீடியோ மூலம் “அறிவு” கிடைக்கும் என்பதற்காக, ஆழமான வாசிப்பின் மதிப்பை நாம் மறந்து வருகிறோம். ஒலி, ஒளி பதிவுகள் சுவாரஷ்யமான அனுபவத்தை வழங்கினாலும், சிந்தனையின் நுண்ணறிவை உருவாக்குவதில்லை. ஆழமாகப் படிக்கும்போது மட்டுமே அறிவு உள்ளத்தில் வேரூன்றி வளர்கிறது.

ஆனால் சமூக வலைத்தளங்களின் வேகமும், ஸ்மார்ட்போன்களின் சுருக்கமான தகவல்களும், வாசிப்புக்கான நேரத்தை திருடிக் கொண்டே செல்கின்றன. எனவே, கற்றலும் புரிதலும் அனுபவமாக அமைய, வாசிப்பு போல பெரும் முதலீடு வேறொன்றுமில்லை என்பதை உணர வேண்டும்.

ஒவ்வொருவரும் வாசிப்பதை பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். ஒரு மனிதன் தன்னை மேம்படுத்தவும், ஒரு சமூகம் தன்னை உயர்த்தவும், ஒரு தலைமுறை தன்னை விழித்தெழுப்பவும் வாசிப்பு அவசியமானதே.
வாசிப்பு என்பது ஒரு பழக்கம் மட்டுமல்ல, மனிதனை உள்மனத்தில் செதுக்கும் ஒரு நுண்கலையாகும். நாம் வாசிக்கும் ஒவ்வொரு பக்கமும், நம் சிந்தனையை விரிவாக்கி, நம் பார்வையைத் தெளிவாக்கி, நம் வாழ்க்கையை மெதுவாக மாற்றும் சக்தி கொண்டது. டிஜிட்டல் உலகின் சிதறல்களைத் தாண்டி, எழுத்தின் ஆழத்தை அணுகும் போது தான் உண்மையான அறிவு நம் உள்ளத்தில் வேரூன்றுகிறது.

எனவே சஞ்சிகைகள், நூல்கள், பத்திரிகைகள் என எழுதப்பட்ட உலகங்களின் கதவுகளை அடிக்கடி திறந்து பாருங்கள். வாசிப்பின் வழியாக உங்கள் சிந்தனையை அழகாக வடிவமைத்துக் கொள்ளுங்கள்.

ஏனெனில், வாசிக்கும் மனிதன் விழிப்புணர்வுடன் உயிர்ப்புடன் வாழ்கிறான் வாசிக்கும் சமூகமே அறிவால் எழுச்சி பெறுகிறது.

ஹப்ஸா பஹ்மீர்
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# சமூக ஊடகமும், சீர்கெடும் சிறுவர் சமுதாயமும்




சிறு குழந்தைகள் கூட இன்று தொலைபேசி இணையம், சமூக ஊடகம் ஆகியவற்றில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றமையை எம் அனைவராலும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆனால், இந்த ஆர்வம் சில நேரங்களில் ஆபத்தான பாதையாக மாறி விடுகின்றது. கல்விக்கான கருவியாக உருவான இணையம் இப்போது பல மாணவர்களின் சீர்கேட்டிற்கான வாயிலாக மாறி வருகிறது என்பது நிதர்சனமான உண்மையாகும்.

பாடசாலை நாட்கள் என்பது ஒவ்வொரு மாணவனினதும் வாழ்க்கையில் மிகவும் அழகானதும் சுவாரஷ்யமானதுமான பருவமாகும். அந்த வயதில் குழந்தைகள் மிகை உணர்ச்சி மிக்கவர்களாகவும் எளிதில் அனைத்தையும் ஏற்று நம்பக் கூடியவர்களாகவும் காணப்படுவர்கள். ஆனால் தற்கால சமூக ஊடகங்கள் (Facebook, TikTok, Instagram, WhatsApp) சமகால மாணவர்களின் மனதைக் கட்டுப்படுத்தக் கூடிய அதியுயர் சக்தியாக உருவெடுத்து வருகின்றன. இதனால் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து கவனம் இடைவிலகி, சமூக ஊடகங்களில் போலியான புகழ் தேடும் நிலைக்கு மாணவர்கள் பலர் இன்று தள்ளப்படுகின்றனர்.

சமகாலத்தில் ஒரு சில மாணவர்கள் "காதல்" என்ற பெயரில் ஆரம்பிக்கும் உரையாடல்களில் தடுமாறி விழுந்து தங்கள் வாழ்க்கையைச் சீர்குலைப்பதுண்டு. சிறுவயதில் காதல் என்பது உண்மையான நிலையொன்றல்ல. அது வெறுமனே உணர்வு ரீதியான தூண்டுதல் மாத்திரமே. ஆனால் இன்றைய பிஞ்சு உள்ளங்கள் அதனை உண்மையான அன்பு என்று நம்பிக்கை கொண்டு தவறான வழியில் செல்வதுமுண்டு. ஆதலால் அவர்களின் கல்வி, மனநலம், எதிர்கால இலக்கு ஆகிய அனைத்துமே பெரிதும் பாதிப்படைகின்றன.

குறிப்பாக இன்றைய நவீன சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும் சில வீடியோக்கள், புகைப்படங்கள், சீர்கேடான உள்ளடக்கங்கள், மற்றும் "லைக்"- "ஷேயர்" என்ற போலியான கருத்தாம்சங்கள் முதலியன குறுங்கால மகிழ்ச்சியின் பால் அவர்களை திசைத்திருப்புகின்றன. இளவயது மனம் அதனை வேடிக்கையாகக் கருதினாலும், அது மெது மெதுவாக அவர்களின் மதிப்பீடு, நற்பண்பு மற்றும் நம்பிக்கைகளை சீர்குலைக்கின்றன.

சமகால சமூக ஊடகங்கள் மற்றும் மாணவர் உறவாடல்களில் பெற்றோர்களின் பங்களிப்பு மிகவும் அளப்பரியது. பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு தொலைபேசிகளை வழங்குவது மாத்திரமன்றி அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? என்ன தேவைகளுக்காக பயன்படுத்த வேண்டும்? என்பவைகளையும் கற்றுக்கொடுக்க வேண்டும். பெற்றோர் தினமும் பிள்ளைகளுடன் கருத்தாடல்களில் ஈடுபடுவதுடன், பிள்ளைகளின் சமூக ஊடக மற்றும் இணையத்தள பாவனை எவ்வாறான போக்கில் பயணிக்கிறது? அவைகளுடனான பிள்ளைகளின் செயற்பாடுகள் என்ன? போன்ற விடயங்களையும் மென்மையாக அறிந்து கொள்ளவும் வேண்டும். இவ்விடயங்களில்




கடுமையான போக்கினை கையாள்வதனை தவிர்த்து, நம்பிக்கை மற்றும் நற்குணங்கள் ஊடாக வழிநடாத்துவதே சாலவும் சிறந்தது.

அதிபர் மற்றும் ஆசிரியர்களின் பங்கும் இவ்விடயத்தில் மிகவும் அளப்பரியவை. பாடசாலை நிர்வாகங்கள் சமூக ஊடகப் பாவனையின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் மற்றும் அபாயங்கள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த வேண்டும். “மனவெழுச்சி மற்றும் உணர்ச்சிக் கட்டுப்பாட்டு நெறிமுறை வாழ்க்கைத் திட்டம்” போன்ற தலைப்புகளில் தொடர்ச்சியான வலுவூட்டல்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். இதில் சமூகத்தின் பொறுப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.

இன்றைய சமூகம் குழந்தைகளுக்கு நல்ல முன்மாதிரிகளை மாத்திரமே எடுத்துக் காட்ட வேண்டும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வானொலி ஒலிபரப்புக்கள், பாடல்கள், இணையத்தள பதிவுகள் மற்றும் காணொளிகள் கூட குழந்தைகளின் மனதில் நல்ல சிந்தனைகளை தூண்டுவனவாக காணப்பட வேண்டும். பாடசாலை மாணவர்களின் பருவ வயதென்பது வாழ்க்கையின் ஆரம்ப அடித்தளம். அந்த அடித்தளத்தில் சீர்கேடுகள், போலியான உறவுகளின் தாக்கம், முறைகேடான நடத்தை மற்றும் அபாயத்துடன் கூடிய சமூக ஊடகப் பாவனையின் தாக்கங்கள் அற்றனவாக காணப்பட வேண்டும். சமூக ஊடகங்கள் நம் கைகளினால் உபயோகிக்கப்படும் கூறிய வாள் போன்றது. அதனை எவ்வாறு கையாளுகிறோம் என்பதில் தான் நம் வாழ்க்கையே தீர்மானிக்கப்படுகிறது.



பெற்றோர், ஆசிரியர்கள், சமூக-சமயத் தலைவர்கள், மத ஸ்தளங்கள், நலன் விரும்பிகள், அரசியல் தலைவர்கள் மற்றும் சமவயதுக் குழுக்கள் முதலான அனைவரும் ஒன்றிணைந்து எமது இளைய தலைமுறையினரை சிறந்த முறையில் பாதுகாத்தால், நமது மாணவர்களின் எதிர்காலம் நம்பிக்கையுடன் மிளிரும் என்பதில் ஐயமில்லை.

**ஆக்கம்:**
**பாத்திமா தில்சானி**
**நிந்தவூர்**




“இஷி இஷி” இவள் திரும்புகிறாள்.

“ஈலங்க எக்கனா பபாவ கிரண்ணட்ட கேன்ன........”

இவள் பிள்ளையை எடுத்துக்கொண்டு மிட்வைப் ஐ நோக்கிப் போகிறாள் பிள்ளையை நிறுப்பதற்காக.

நிறுத்து முடிய முன் மீண்டும்

“இஷி..... இஷி.... இஷி....... இங்க”
இவளைப் பின்னாலிருந்து
ஒரு கை கூப்பிடுகிறது... திரும்பிப் பார்க்கிறாள்...
எங்கோ கண்ட முகம் போலத் தெரிகிறது இஷி நிறுத்து முடிந்த பின், பிள்ளையை ஒரு கையில் அணைத்தவாறும் மற்றைய கையில் பிள்ளையின் ஆடை மற்றும் இதர பொருட்களை இறுகப் பிடித்தவாறும் அவளை நோக்கிப் போகிறாள்.
“ஆ... ஷாகிராவே...... நீங்க.....”

“ஓ... இஷி... என்ன செய்தி....?”

“ம்.... செல்... லம்... செல்லம்...” என இஷியின் கையிலிருந்த பிள்ளையின் கன்னத்தைக் கிள்ளுகிறாள் ஷாகிரா.

“இஷி...இது எத்தனையாவது பேபி....?”

“ம்... ஆ...ம்.....நாலாவது....” என்று சொல்லி

முடிப்பதற்குள் இஷியின் தொண்டை அடைத்து விட்டது.

“வாவ்..போர்த் பேபியா....? நைஸ்.....”

“ஷாகிரா நீங்க எங்கேன் இங்க....?”

“ஓ...நான் இங்க வந்து சிக்ஸ் மன்த்துக்கு மேல ஆவுது....
எங்கட பூ உம்மாக்கு கொஞ்சம் சொகமில்ல...
ஸோ....! எங்கட மமி இங்க வந்து அவவ பார்த்துக்கனும் என்டிட்டா.......”

இன்ஷிரா இவளைத்தான் எல்லோரும் “இஷி” என்று சிறு வயது முதலே செல்லமாக அழைக்கிறார்கள். இன்ஷிராவும் ஷாகிராவும் ஆண்டு ஒன்று முதல் ஐந்து வரை ஊர் பாடசாலையிலே ஒன்றாகப் படித்தவர்கள்.

ஷாகிரா புலமைப் பரிசில் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று கொழும்பு பிரபல பாடசாலை ஒன்றில் தன் படிப்பைத் தொடங்குவதற்காக வேண்டி குடும்பம் சகிதம் கொழும்புக்கு சென்று விட்டாள். அதன் பிறகு அவள் சிறு தேவைகளுக்கு மாத்திரம் ஊருக்கு வந்து போனாள். நண்பர்கள் என்று யாருடனும் உறவாடவில்லை. இவள் நன்றாக மாறிவிட்டாள். ஷாகிரா தற்போது ஒரு வைத்தியர். அதுதான் தன் பள்ளித் தோழியை நீண்ட இடைவெளிக்குப் பின் கண்டதால் பெருமகிழ்ச்சி கொள்கிறாள்.

“ஷாகிரா... இது ஒங்கட பேபியா?......”

“ஓப் கோர்ஸ்.... ம்..... ஏன்ட பெஸ்ட் பேபி... நான் படிச்சி முடிச்ச பொறவே தான் எங்கட டெடா எனக்கு மேரேஜ் பண்ணி வெச்சாங்க.....இஷி யூ ஸோ லக்கி.. நாலு புள்ள ஈக்கி.... நைஸ்... நைஸ்... மாஷா அல்லாஹ்.......” என தான் காலம் பிந்தி விட்டோம் என்று கொஞ்சமாய் ஒரு ஏக்கம் ஷாகிராவுக்கு.

ஷாகிராவின் கைத்தொலைபேசி அழைக்கிறது.
“ஹலோ... டெடா.. ஓ... பினிஷ்.. ஓகே.. நீங்க வாங்க..”

“ஆ.. இஷி.. மத்த பேபிஸ் எப்பிடி..? ஸ்கூல்.. மொண்டஸோரி... போறாங்களா...? எங்கட ஸ்கூல் தானா.....? மத்த பேபிஸ் எப்பிடி போய்ஸ், கேர்ள்ஸ்.....?” என்று அடுக்கடுக்காய் கேள்விகள் ஷாகிராவிடமிருந்து.

இன்ஷிரா தடுமாற்றத்துடன் புன்னகைக்கிறாள்.
“ம்.. ம்.. ஆ....” என்று நிசப்தமாகிறாள்.

“இஷி.. என்ன..? உங்களத்தான் கேக்குறன்... ஆப்டர் லோன்ங் டைம் தானே அதுதான் கேக்குறன்.. ஒன்டும் நெனக்க வாணாம்..ஸொரீ...”

“ச்சீ... இல்ல.. இல்ல..... பரவாயில்ல...”
சிறு மௌனத்தின் பின் இஷி,
“பெஸ்ட்டும் ஸெகன்டும் ஆம்புளப் புள்ளக... ஓ.. அவங்க நாங்க படிச்ச ஸ்கூல்லதான்... மூனாவது குட்டி இந்த வருஷம் தான் மொன்டஸோரிக்கு சேர்த்தது....”

மீண்டும் ஷாகிராவின் தொலைபேசி ஒலிக்கிறது.

“ஓகே இஷி உங்கள மீட் ஆகினது.. யூ ஆர் எ வெரி ரெஸ்பொன்ஸிபில் மத்தர். எனி வே..யூ லக்கி....” என இன்ஷிராவின் முதுகைத் தடவிக் கொடுத்தாள் ஷாகிரா.

“ஓகே இஷி... பாய்.... பாய்...”

“ஷ்...ா...ஷாகிரா..” என ஷாகிராவைப் பின்தொடர்ந்தாள் இஷி.

“ஆ.. இஷி...என்ன..? நீங்க என்னோட வர்ரீங்களா..? ஒங்கட ஊடு அந்த பழைய கடைக்கிட்ட தானே..? நான் ஒங்கள ட்றொப் பண்ணிட்டு போறன்..”

“ஷாகிரா...இல்ல..ஷா....” என சொல்லி முடிப்பதற்குள் ஷாகிரா பேச்சை இடைமறித்தாள்.

“என்ன இஷி.. சொல்லுங்க..?”

“ஷாகிரா இது ஏன்ட புள்ளக இல்ல..” என்று மீதியை இன்ஷிரா தொண்டைக்குள் விழுங்கி விட்டாள். ஷாகிரா பதற்றத்துடன்,
“என்ன இஷி சொல்றீங்க..? எனக்கு வெளங்கல்ல..”
இன்ஷிரா மௌனமானாள். அவளுக்குப் பேச்சு வரவில்லை.
“இன்ஷிரா... நீங்க அப்ப.... இது ஒங்கட ஹஸ்பண்ட புள்ளகளா..?.. ஸொரி. ஸொரீ..
இஷி ஐ ஏம் ஸொரீ..”

இன்ஷிராவின் தொண்டை அடைத்து விட்டது.
“இல்ல ஷாக்..கிரா..அப்படி ஒண்டும் இல்ல...” அவளது உதடுகள் பேச மறுத்தன.

தட்டுத்தடுமாறிக்கொண்டே “ஷாகிரா..எனக்கு

இன்னம் கல்யாணமே நடக்கல்ல…"

"ஓஹ் மை கோட்… எனக்கு புரியல.. என்ன என்ன சொல்றீங்க..இஷி என்ன…? டிடின்ட் கெட் யூ மெரீட் ஸ்டில்…..?…அல்லாஹ்…."

"இவங்க எல்லாம் ஏன்ட தாத்தாட.."

"ஓஹ் நான் தான் மிஸ்அன்டஸ்டேனிங்.." என ஷாகிரா தன்னைத்தானே பேசுகிறாள்.

"ஆஹ் பரவாயில்ல…ஷாகிரா.." இஷியின் கண்களில் கண்ணீர் வழிகிறது. மீண்டும் ஷாகிராவின் தொலைபேசி அழைக்க, ஷாகிராவும் "ஓ…டெடா வந்திட்டீங்களா? நான் வரேன்…" என அவசரமாக இன்ஷிராவையும் இழுக்கிறாள்.

"இஷி ஒங்கட தாத்தா எங்க பொரின்ங்லயா..? ஏன் ஒங்களுக்கு வெடிங்….?"

"இல்ல ஷாகிரா… தாத்தா இங்க தான்.. ஒபீஸ் போற.. அவ லீவு போடியல்ல.. அதனால நான் தான் புள்ளகள ஊசி அடிச்ச, நிறுப்பதற்கு கொண்டுவார… அவ தான் ஆறு மாசமாக வந்த. இது ஏழாம் மாசம். புள்ளக எல்லாரையும் நான் தான் பாத்துக்கொள்ற. தாத்தாவும் மச்சனும் தான் என்னப் பாக்கிய…" மெல்ல விசும்புகிறாள் இஷி.

"இஷி ஒங்கட உம்மா சொகமா ஈக்கிறாங்களா…?"

"இல்ல…ஷாகிரா..எங்கட உம்மா மௌத்தாகி மூன்று வருஷமாகிய…"

"அல்லாஹ்….பாவம்..அவ தானே ஒங்களயும் தாத்தாவையும் ஸ்கூலுக்கு கொண்டு வார… எனக்கு நெனவு ஈக்கி…பாவம்…" என்றாள் கண்ணீருடன் ஷாகிரா.

இன்ஷிராவின் தாய் இருக்கும் போதே எத்தனையோ திருமண விஷயம் வந்தன. வீடு, நகைநட்டு, திருமணச்செலவு மற்றும் ஏனைய செலவுகளால் அவளின் மூத்த மகள் வந்த வரன்களை எல்லாம் உதாசீனப்படுத்தி விட்டாள். போதாக் குறைக்கு தகப்பன், அண்ணன் சார்பாக மூத்த மருமகனும், மாப்பிள்ளையின் நடத்தை, தொழில், குடும்பம் பற்றி அலசி ஆராய்ந்து புறக்கணித்து விட்டான். இன்ஷிராவின் தாய்க்கு நெருங்கிய சொந்தம் என்று யாருமில்லை. இன்ஷிராவின் தகப்பனும் அவள் எட்டு வயதிருக்கும் போதே இறையடி சேர்ந்து விட்டார்.

இதனால் இன்ஷிராவின் வாழ்க்கை இப்படியாகிற்று. ஆனால் எப்படியோ இன்ஷிராவின் தாத்தாவுக்கு வாப்பாவின் நண்பர் ஒருவரின் உதவியால் திருமணம் நடைப்பெற்றது.

தற்போது அவனும் கட்டாரில் வேலை பார்க்கிறான். தாயின் மறைவுக்கப் பின் வீட்டு வேலை, பிள்ளை வளர்ப்பு இன்ஷிராவின் பொறுப்பாகிற்று. ஆழ்ந்த சிந்தனையில் இருந்த இஷியைத் தட்டி, "என்னா… இஷி… இப்ப ஒன்டும் பார்க்கறல்லயா..?"

"இல்ல.. ஷாகிரா.. இப்ப வயசும் பெய்த்த எனக்கு இனி மாப்பிளயும் டிமான்ட்.. கலியாணம் பேச கஷ்டம் என செல்லிய தாத்தாவும் மச்சனும்…. நானும் உம்மா வாப்பா இல்லாதவள், நாணா தம்பி கூட இல்ல…என்ட விதி அப்பிடித்தான்…." என்று மனப்பாரத்தை வடிக்கிறாள் இன்ஷிரா.

"என்ன இஷி இப்பிடி சொல்றீங்க…? என்ட ஏஜ் தானே நீங்களும்…எனக்கு மேரேஜ் ஆகி டூ யியர்ஸ் தான் ஆகுற. தேர்ட்டி டூ…ஏஜா..? என்ன ஒங்கட தாத்தா சரியான செல்பிஷ்……?" என்று இன்ஷிராவைப் பார்த்தாள்.

"என்ன செய்ய ஷாகிரா…நான் ஓலெவல் முடிஞ்சதும் ஊட்டுக்காகிட்டே….. அது தான் மிச்ச காலம் பெய்த்த…" என்று காலத்தின் மீது பழியைப் போட்டாள் இன்ஷிரா.
"ஓகே டோன்ட் வொரி.. நான் டெடாட்ட இதப்பற்றி சொல்றன்.ஒங்களுக்கு நல்ல விஷயம் நடக்கும்….இன்ஷா அல்லாஹ்" என்று ஷாகிரா சொல்ல இன்ஷிரா அவளை நன்றிப் புன்னகையோடு பார்க்கிறாள். அவளின் முகத்தில் ஏதோ ஒரு வெளிச்சம். "ஆ… இஷி இங்கால வாங்க… டெடா நிக்கி… ஒங்கல ட்ரொப் பண்றன்…." என்று ஷாகிரா அவளை கூப்பிட, இரு தோழிகளும் புது மாற்றத்துக்காக வாகனத்தை நோக்கி நடக்கிறார்கள்.

யாவும் கற்பனை. முற்றும்.

**ஆக்கம்:**
**மக்கொனை நிலா**



# அன்புக்கு நிகர் அம்மா

பத்து மாதம் சுமந்த தெய்வம்
கடவுள் போற்றும் சைவம்

என்னை கவனமாக பார்த்துக் கொள்ளும் என்னம்மா
தாலாட்டு பாடும் இசை கண்ணம்மா

தன் இரத்தத்தை பாலாக்கிய தெய்வ பெருமை அவளுக்கே!
அருமை நான் அவள் வயிற்றில் பிறந்ததில் மகிழ்ச்சி எனக்கே!

உன் அரவணைப்பு நினைவுகள் தீயில்
போட்டாலும் எரியாது....
உன் அன்புக்கு எங்கு போவது?
எங்கு போனாலும் வராது

நீ நிலாவை காட்டி சோறூட்டிய காலம்
நினைவுக்கு வருகிறது
தற்போது வளர்ந்த நான்
உன் மடியில் குழந்தையாக வேண்டும் என்று
என் மனம் சொல்கிறது

இன்றும் மறக்கவில்லை உன் பாசம்
அம்மாவின் அரவணைப்பில் இந்த காலம்

தெய்வப் பெண்ணை மறக்க
முடியவில்லை என்னால்
அவள் உயிரிருக்கும் வரை உதவுவேன்
என் அன்பால்!

**சிவகஜன்- தியத்தலாவை**



# எழுத்துக்களின் சக்தி

எழுத்து - சிறு தீப்பொறி போல
மனதை எரியவைக்கும் வெளிச்சம் தரும்

அதில் மறைந்திருக்கும் எண்ணங்கள்
உலகை மாற்றும் வல்லமையாம்

பேச முடியாதோர் மனதைப் பேசும்
அழுகையை ஆறுதலாக மாற்றும்

எழுத்து - உயிரின் நிழல் ஆகும்
ஒரு சொல் முளைக்குமேல் புரட்சியாகும்

ஒரு வரி எழுந்தால் நம்பிக்கையாகும்
கையால் எழுதும் ஒவ்வொரு எழுத்தும்
இதயத்தைத் தொடும் சக்தி உடையது

கண்ணீரை வார்த்தைகளாக்கும் அதிசயம்
துயரத்தில் தோன்றும் புதிய ஒளி
அதுவே எழுத்தின் உண்மை அற்புதம்

எழுத்து ஒரு ஆயுதம் ஒரு அருள்வாக்கும்
அது மனதைப் புணர்த்தும் மருந்தும்

அன்பைச் சொல்வதிலும் துன்பம் தீர்ப்பதிலும்
அது மனிதத்தின் மொழி ஆகும்

நிசப்தத்தின் மத்தியில் முழங்கும் ஓசை
உலகம் கேட்கும் இதயத்தின் சத்தம்

எழுத்தே அந்த மௌனத்தின் குரல்
நாளும் மாறும் காலங்களிலும்
எழுத்து நிலைத்திருக்கும் சாட்சி

நாம் மறைந்தாலும் நம் சொற்கள் வாழும்
அவை நினைவாக நிலைத்து நிற்கும்

ஒரு சிறு வரி ஆயிரம் உயிரைத் தொடும்
அதுவே இலக்கியத்தின் மறைவில்லா வலிமை
எழுத்துக்களின் சக்தி - நித்திய தீபம்.

ஆக்கம்:
**நிஸ்லா நிஸாம்**
**வியாங்கல்லை**

# ஆளுமை அறிமுகம்

பெண் என்பவள் உண்மையில் போற்றப்பட வேண்டியவள். சமூகத்தில் சம உரிமையோடு நடத்தப்பட வேண்டியவள். ஆனால் பெண்ணானவள் சுதந்திரம் என்ற பெயரில் தனது கண்ணியத்தை மீறும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது.



# திருமதி.மாஜிதா தவ்பீக்

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் எழில் மிகு நகரமான மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரே திருமதி. மாஜிதா தவ்பீக் ஆவார். இவர் அப்துல் ஹமீது மற்றும் கதீஜா உம்மா அவர்களுக்கு பிறந்த புதல்வியாவார். இவருக்கு ஐந்து சகோதர சகோதரிகள். இவரது மூத்த சகோதரர் ஒரு ஆயுர்வேத வைத்தியராவார். இருப்பினும் இவர் ஒரு சிறந்த எழுத்தாளர் கவிஞராவார். மேலும் இவரது பல குடும்ப உறுப்பினர்கள் எழுத்துத்துறையில் சிறந்து விளங்குகின்றனர். எனவே இதனடிப்படையில் சிறந்த எழுத்தாளர் கவிஞர் தமிழ் வித்தகர் இப்படியான குடும்பப் பின்னணியில் இருந்து பயிற்றப்பட்டவராகவே இவரது எழுத்துப் பணியும் சிறந்து விளங்குகிறது எனலாம்.

இலக்கிய துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கில் தனது பணிகளை சிறப்பாக செய்து கொண்டிருக்கும் திருமதி. மாஜிதா தவ்பீக் அவர்களுடனான நேர்காணல் இதோ!

1)நீங்கள் கல்வி கற்ற பாடசாலைகள் மற்றும் கற்கைகள் பற்றி பகிரலாமே?

ஸம்ஸ் இல்ம் மஹாவித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தரம் வரையில் கல்வி கற்றுள்ளேன். தற்போது இலக்கியத்துறையில் எழுதுவதனூடாக பல விடயங்களை கற்றுக் கொள்வதுடன் அனுபவ ரீதியாகவும் கற்றுக் கொள்கிறேன்.

2) நீங்கள் இலக்கிய துறையில் செய்யும் பணிகள் பற்றி கூறலாமே?

நான் கவிதை, கட்டுரை, சிறுகதை, விமர்சனம், நேர்காணல், கவியரங்குகளை நடத்துவது, பங்குபற்றுவது என 43 வருட காலமாக இலக்கியத் துறையில் பணி செய்து வருகின்றேன். இலங்கை ஒ. கூ .தாபனம் அன்னை வானொலியில் தொடர்ச்சியாக 35வருட காலம் சகல நிகழ்ச்சிகளிலும் 300இற்கும் மேற்பட்ட கவிதைகளையும் 100இற்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் 4 சிறுகதைகளையும் 100 இற்கும் மேற்பட்ட விமர்சனங்களையும் பகிர்ந்து கொண்டுள்ளேன்.



மேலும் ஊவா வானொலி, சக்தி, சூரியன் மற்றும் பிறை வானொலிகளிலும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி, தமிழன், நவமணி, சுடரொளி, மித்திரன், சிந்தாமணி போன்ற பத்திரிகைகளிலும் பல சஞ்சிகைகளிலும் 200 இற்கும் மேற்பட்ட கவிதைகள் கட்டுரைகள் என்பவற்றையும் எழுதி வந்துள்ளேன். வானொலியிலும் பல கவியரங்குகளிலும் பங்கு பற்றியுள்ளேன். மருதமுனை ஜோதா என்ற புனை பெயரிலும் 50 கவிதைகள் எழுதியுள்ளேன்.

மூதூர் J. M. I. ஆன்லைன் நூலகத்திலிருந்து வெளியாகிய வனம் மற்றும் ரேகைகள் நூல்களில் எனது இரு கவிதைகள் வெளிவந்துள்ளது.

நான் லக்ஸ்டோ மீடியா நெற் வோக் ஸ்ரீ லங்கா வினுடைய உயர்பீட உறுப்பினராக பல வருட காலமாக பணி புரிந்து வருகின்றேன். மேலும் மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உப தலைவியாகவும் பணிபுரிந்து வருகின்றேன்.

### 3) நீங்கள் பெற்ற விருதுகள் பற்றியும் கூறலாமே?

எனது இலக்கிய பயணத்தின் ஆரம்ப காலகட்டத்திலிருந்து பல விருதுகளையும் நான் பெற்றுள்ளேன். மேலும், 2017இல் சுவதம் விருது உட்பட தற்போது வரை பல விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன்.

### 4) நீங்கள் இலக்கியம் தவிர வேறு துறைகளில் செய்யும் பணிகள் இருந்தால் கூறலாமே?

நான் மனித உரிமைகள் அமைப்பில் செயற்பாட்டாளராகவும் இருப்பதோடு, கல்முனை கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்திக் குழுவின் செயலாளராகவும் பணி புரிகின்றேன்.




மேலும், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளராகவும் சேவை செய்துள்ளேன்.

அதுமட்டுமின்றி அழகுக்கலை, தையற்கலை, சமையற்கலை, கையலங்காரம் என்பன முறையாகக் கற்று அதன் மூலம் வருமானத்தைப் பெற்று வருகின்றேன்.

### 5) நீங்கள் வெளியிட்ட நூல்கள் பற்றி பகிர்ந்து கொள்ளலாமே?

2025இல் உண்மையின் ஒரு பக்கம் என்ற கவிதை நூல் புத்தகமொன்றையும் வெளியிட்டுள்ளேன். மேலும் 2026இல் இரண்டாவது கவிதை நூலையும் வெளியிட உத்தேசித்துள்ளேன்.

### 6) உங்களது நீண்ட இலக்கிய பயணத்தில் எதிர்கொண்ட சவால்கள் பற்றியும் அவற்றை எதிர்கொண்ட விதம் பற்றியும் கூறலாமே?

எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் சவால்களுக்கு முகம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அதே போன்று தான் ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை சவால்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றேன். ஏனெனில் சவால்களை வெற்றி கொண்டால் தான் நிறைய சாதிக்கலாம். மேலும், பொறுமை மற்றும்







நிதானம் இவற்றை கொண்டு சவால்களை வெற்றி கொள்ளலாம்.

### 7) உங்களது இலக்கு பற்றி கூறலாமே?

வாழும் காலம் அனைத்திலும் இலக்கியத்திற்கு நற்பணி செய்து, பல நூல்களை வெளியிட வேண்டும் என்பதே எனது இலக்காகும்.

### 8) நீங்கள் சமூகத்துக்கு கூற எத்தனிக்கும் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளலாமே?

பெண் என்பவள் உண்மையில் போற்றப்பட வேண்டியவள். சமூகத்தில் சம உரிமையோடு நடத்தப்பட வேண்டியவள். ஆனால் பெண்ணானவள் சுதந்திரம் என்ற பெயரில் தனது கண்ணியத்தை மீறும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது. பெண் என்பவள் அவளது பெற்றோர், குடும்பம், சமூகம் என அனைத்தையும் பிரதிபலிக்கிறாள் என்பதை அவள் எப்போதும் மனதில் வைத்து நடந்து கொள்ள வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

### 9) எமது ஊடகமான ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பற்றி கூறுங்களேன்?

ஸ்கை தமிழின் தலைவர் மிகவும் ஆளுமையும் தன்னம்பிக்கையும் மிக்கவர். தளராது சாதிப்பவர். வாழ்க ஸ்கைத் தமிழ்.




துணிந்தெழு சஞ்சிகையைக் கூறப் போனால் காலத்திற்குப் பொருத்தமான சஞ்சிகையாகும்.

வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்கு களம் கொடுத்து ஊக்குவித்து அடையாளப்படுத்தி தட்டிக் கொடுத்து உச்சத்தில் வைக்கும் ஒரு சிறந்த சஞ்சிகையாகும்.

சிறந்த ஆளுமைகளை அடையாளம் கண்டு அலங்கரித்து அழகு பார்ப்பதில் சுடர் தீபம். துணிந்தெழு சஞ்சிகையின் அபிமான நேயராய் அக மகிழ்கின்றேன்.

துணிந்தெழு சஞ்சிகை மற்றும் ஸ்கை தமிழ் ஊடகம் மென்மேலும் சிறந்து விளங்க எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

செவ்வி கண்டவர்:
**ஹப்ஸா பஹூமீர்**
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை



# துவண்ட மனதில் துளிர்ந்த மழைத்துளி...

துகள்களான உதிரத்தில் கலந்து
தந்தை வழியே உருவெடுத்தேனே
துளியாக இருந்த யெனை
தாயவள் சுமந்தாள் கருவிலே....!

தாயிப் கல்லடிகளை தாண்டி
திருவாளன் மறை யளித்தானே
தீனை உலகெங்கும் பரப்பி
தூயவழி தந்தான் மாநபியாலே....!

தட்டிய களி மண்ணாலே
தனிக் குடிசை யானதே
தாகம் எல்லை மீறியதே
தக்க வேளை உணவின்றியே...!

தமக்கை யில்லா குடும்பத்திலே
தம்பி சுமைகள்
சிகை மீதே
தள்ளாடும் நோயில் பிதாவுமே
தவித்தேன் வழி யின்றியே....!

தத்தித் தாவி எழுதுகோலின்
துணைக் கொண்டு நானும்
தாள் பரீட்சை வெற்றியாலே
தடம் வைத்தேன் இலட்சியத்திலே....!

தோள் தருவா ரென்று
துணை நின்றாரை நம்பியே
தன்மை பேச்சில் மயங்கியே
தவித்துப் போனேன் நானுமே....!

தீயினால் சுட்ட பின்னும்
தீராபிடி ஈமான் மீதே
தந்தை இப்ராஹீமின் வாழ்க்கை
தன்னம்பிக்கை எனக் களித்ததே....!

தடியால் தடுத்த பின்னும்
தீங்குக்குள் தள்ளிய பின்னும்
துவண்டு விடாது மனதால்
துளிர் விட்டு மிளிர்கிறேன்....!

சப்ரான் நஜீர்
வரக்காமுறையான்

# பெண் மௌனத்துள் சுமக்கும் மௌதீனம்

ஒரு பெண்ணின் முன்னேற்றத்திற்கு
வாழ்க்கை எனும் பொய்கையில்
உறவாக முளைத்த செடிகள் எல்லாம்
நஞ்சாக மலர்ந்து வார்த்தைகளை துளியாய்
தொடங்கி விஷமாய் விளைப்பதே ஏராளம்!

பெண்ணின் ஏற்ற இறக்கங்களையும்
எண்ணிலடங்கா தொல்லைகளையும்
ஒரு ஆண் ஏணி வைத்தாலும் நிழலை கூட
தொட முடியாது!

அக்கினி பிடியில் சிக்கி அழிகின்ற
உயிரை விட அவள் இலக்கை அடைய
சந்திக்கும் அழிவை கண்டு அவளுக்காக
அகிலமே அழுகிறதே!

சமூகத்தை போர் களமாய் கடந்து செல்ல
வாழ வைக்கும் பெண்களும்
வாழ துடிக்கும் பெண்களும்
வரையறையின்றி போகிறார்கள் சமூகமோ
மௌனமாய் மூச்சை மறைத்துக் கொண்டு
நிசப்தமாய் துயில்கிறதே!

தன்னம்பிக்கையின் இறகுகள் கிழிக்கப்பட்டு
பயத்தின் இருளில் மூடப்பட்டு
பெண் வாழ்க்கை குற்றவாளி கூண்டாய் மாற
சமூகத்தின் கண்களுக்கு
பெண்களோ பொருளாய் மாறிவிட்டதேன்?

பார்வைகளில் அவள் பொருள்
புரிந்தெடுக்கப்படாத உள்ளம் அல்ல! கனவை
நோக்கிய பயண ஆசை
சிறகுகள் விழுந்து படர்ந்தாலும்
சமூகத்தின் பாரம் தோள் மேல் சாய
பெண்ணாய் பிறந்தது யார் சாபம்?

ஆனால்.. ஒவ்வொரு விழுதிலும்
ஒரு எழுச்சி உறங்குகிறது
ஒவ்வொரு தண்ணீரிலும் ஒரு தீபம் ஏற்கிறது
பெண்ணின் இதயம் அழிந்தாலும்
அவள் நம்பிக்கை ஒரு போதும் அழியாது
அவளே நாளைய ஒளி! அவளே உயிரின்
மொழி!

ஏ.எம்.பாத்திமா ஷறாபா
அக்கரைப்பற்று

## இளம் கலைஞர் அறிமுகம்

# ஓவியராய் உயரப் பறக்கும் ஜதிஸ்குமார்



அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேசத்தில் மத்திய முகாம் பதினோராம் கிராமத்தில் வெற்றிவேலாயுதம், கலாமணிக்கம் ஆகியோருக்கு மகனாக 1992 ஆம் ஆண்டு பிறந்தார் ஜதிஸ்குமார். இவர் தனது ஆரம்பக் கல்வியினை கமு/சது/ சரஸ்வதி வித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர் தரத்தினை கமு/சது/நாணமடு இந்துக் கல்லூரியிலும் கற்றார். இவருக்கு சிறுவயதில் இருந்து சித்திரப் பாடத்தில் ஆர்வம் அதிகம் என்பதனால் சித்திரம் வரைவதில் அதிக ஈடுபாடு காட்டி வந்தார்.

அப்போது இவருக்கு சித்திரம் கற்பித்தவர் திரு சா.செல்வசிகாமணி ஆசிரியராவார். பின்னர் உயர்தரத்தில் திரு.த.வாமதேவன் ஆசிரியரிடமும் சித்திரப் பாடத்தினை கற்றுக் கொண்டார்.

இவருடைய சிறு வயது ஆசை பிற்காலத்தில் தான் ஒரு ஓவியராக வரவேண்டும் என்பதுதான். அதற்காக ஓய்வு நேரங்களில் ஓவியங்கள் வரைவது, ஓவியப்போட்டிகளில் பங்கு கொள்வது என தனது நேரங்களை அதற்காகவே அதிகம் செலவு செய்தார். உயர்தரத்தில் கலைத்துறையில் சித்திரத்தையும் ஒரு பாடமாக கற்று அதில் சிறந்த பெறுபேறுகளை பெற்று சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்திற்கு சித்திரப் பாடத்தில் பட்டப் படிப்பினை கற்றுக் கொள்வதற்காக 2013 ஆம் ஆண்டு நுழைந்தார். அங்கே பாடசாலை கல்விக்கும் மேலதிகமாக பல்வேறு ஓவியம் சார்ந்த விடயங்களை கற்றுக் கொண்டதோடு, பல ஓவியர்களை சந்திக்கும் வாய்ப்பும் இவருக்கு ஏற்பட்டது. இது இவரது வாழ்வில் மிக முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது. ஓவியர்கள் எவ்வாறு சமூகப் பிரச்சினைகளை ஓவியங்களுக்கூடாக வெளிப்படுத்துகிறார்கள் என்கின்ற நுட்பங்களை பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொள்கிறார். அதன் மூலம் தான் ஓவியராக வேண்டும் என்கின்ற உத்வேகம் அதிகரித்தது. நான்கு வருடங்கள் தனது பட்டக் கல்வியினைப் பூர்த்தி செய்து இளம் நுண்கலைமாணி பட்டத்தினை 2017 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டார். பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருக்கும் வேளையில் தனது நண்பர்களால் அரங்கேற்றப்பட்ட "அடையாளம்" எனும் நாடகம் கொழும்பில் அரங்கேற்றப்பட்டது. அந்த நாடகத்திற்கான பின்னணி அமைப்பினை மேற்கொண்டமைக்காக சிறந்த மேடை பின்னணி அமைப்பிற்கான தேசிய விருதும் இவருக்கு கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் அதே ஆண்டு ஈழத்தின் மிக முக்கியமான தமிழ் பெண் ஓவியரான கமலா வாசுகியிடமிருந்து அழைப்பு வருகிறது, "தாங்கள் வன்முறையற்ற வாழ்வுக்கான ஓவியர்கள் என்ற குழுவுடன் இணைந்து ஓவியக் கண்காட்சிகளில் ஈடுபட விருப்பம் இருப்பின் இணைந்து கொள்ளுங்கள்" என, இவ்வாறான சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து காத்திருந்த இவர், உடனடியாக அக்குழுவுடன் இணைந்து பணியாற்ற ஆரம்பித்தார். அதற்கு முன்னதாக ஓவியர்களுக்கான ஒன்று கூடல் இடம் பெறுகின்றது. அந்த ஒன்று கூடலில் கருத்தியல் சார்ந்த சமூகப் பிரச்சினைகள் மற்றும் பல்வேறு விடயங்கள் மிக ஆழமாக ஆராயப்படுகின்றன. அந்த கருத்துக்களில் ஈர்க்கப்பட்ட இவர் தொடர்ச்சியாக அவர்களோடு சேர்ந்து கண்காட்சிகளில் ஈடுபட வேண்டும் என்கின்ற ஆர்வத்தோடு தொடர்கிறார்.

இவரது கலை படைப்புகள் பெண்கள் மீதான வன்முறையை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. குறிப்பாக நுண்கடன் எனும் முறையற்ற திட்டங்களினால் பெண்கள் கடனாளியாக மாறுகின்ற



போது அவர்களுக்கு ஏற்படுகின்ற வன்முறைகளை வெளிப்படுத்துவதாக காணப்படுகின்றது. நமது நாட்டில் அதிகளவான பெண்கள் சுய உழைப்பின்றி ஆண்களின் உழைப்பை நம்பி ஆண்களில் தங்கி வாழ்கின்றனர். உழைப்பு இன்றி தங்கி வாழும் பெண்கள் கடன் பெறும்போது அந்த கடனை திருப்பி செலுத்துவதில் தாமதம் ஏற்படுகின்றது.



இச்சந்தர்ப்பத்தில் கடன் கொடுத்தவர் மூலமாக கடனைப் பெற்றுக் கொண்ட பெண்கள் அக்கடனை திருப்பிச் செலுத்தும் வரை வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் எனும் கருத்தியலில் இவரது ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இவரது முதலாவது குழு சார்ந்த ஓவிய கண்காட்சி மட்டக்களப்பு தாண்டவன்வெளியில் காணப்படுகின்ற பேர்டினென் மண்டபத்தில் 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பிரதான வீதி ஓரத்திலும் பின்னர் கிளிநொச்சி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு கல்லடிப் பாலம், கொழும்பு என பல்வேறு இடங்களில் வன்முறையற்ற வாழ்வுக்கான ஓவியர்களின் ஓவியக் கண்காட்சி ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது. இந்த ஓவிய கண்காட்சிகளில் இவரது ஓவியங்களும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் சிறுவர்கள் வன்முறையற்ற வாழ்தலில் இருந்து விடுபடுவதற்கும் சமூக ஒற்றுமையை பிரதிபலிப்பதற்கும் நல்ல உணவுகளை தேடிக்கொள்வதற்குமான கருத்துக்களை வெளிப்படுத்தும், வர்ணம் தீட்டும் புத்தகமும் இவர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தில் இவரால் ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன.

இவரது நீண்ட நாள் ஆசைகளில் ஒன்றான தனது தனித்துவமான ஓவியக் கண்காட்சியினை தனது





பிரதேசத்தில் நடத்த வேண்டும் என்பதாகும். இதற்காக அவர் கடந்த எட்டு வருடங்களாக வரையப்பட்ட ஓவியங்கள் அனைத்தையும் சேகரித்து கடந்த 2025 செப்டெம்பர் மாதம் நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் மூன்று நாட்கள் “மீண்டெழல்” எனும் தலைப்பில் நடாத்தியிருந்தார்.

இக் காண்காட்சி மூலம் தான் உள்ளூர் ஓவியனாக உள்ளூர் பெண்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தியிருந்தார். பெண்களுடைய உழைப்பு நாட்டிற்கும் நாட்டினுடைய பொருளாதாரத்திற்கும் மிகவும் அத்தியாவசியமான ஒன்று. அதனுடைய முக்கியத்துவம் பெண்களின் வாழ்வாதாரத்தை எந்த அளவுக்கு உறுதியாக்குகின்றது என்பதை கலைப்படைப்புக்கூடாக வெளிப்படுத்தியிருந்தார்.

ஆரம்ப காலத்தில் நுண்கடன் மூலமாக பெண்களுக்கு ஏற்படுகின்ற வன்முறைகளையும் பாதிப்புகளையும் தனது ஓவியங்களுக்கூடாக வெளிப்படுத்தி இருந்தார். தற்பொழுது உள்ளூர் உற்பத்திகள் எங்களுக்கு எந்த அளவு முக்கியமானது, அது நிலைத்திருப்பதன் அவசியம் அதன் மூலமாக எங்களுடைய வியாபாரத்தையும் வாழ்வாதாரத்தையும் நாட்டினுடைய பொருளாதாரத்தையும் எவ்வாறு கட்டியெழுப்ப முடியும் என்பது பற்றிய வெளிப்பாடாக இவரது ஓவியங்கள் காணப்படுகின்றன.

இது இவரது முதலாவது தனியாள் ஓவியக் கண்காட்சியாகும். இதற்கு முன்னர் எட்டுக்கும் மேற்பட்ட குழு கண்காட்சிகளில் பங்கு பற்றி இருக்கும் இவர் கமு/சது/நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் ஆசிரிய அபிவிருத்தி உத்தியோகத்தராக இருந்து, சித்திரப் பாடத்தினை மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்து வந்த அதே நேரம் இந்திய நாட்டின் புலமைப்பரிசில் மூலமாக தெரிவு செய்யப்பட்டு தற்பொழுது இந்தியாவில் உத்தர பிரதேசத்தில் அமைந்துள்ள லக்னோ பல்கலைக்கழகத்தில் சித்திரக் கலைத் துறையில் முதுகலைமாணி பட்டத்தினை பயின்று வருகின்றார். தனது கனவுகளை நனவாக்க துடிப்போடு நகரும் ஓவியர் வெற்றி ஜதிஸ்குமாரின் படைப்புக்கள் வெற்றி காண துணிந்தெழு சஞ்சிகை சார்பில் வாழ்த்துகிறோம்.

செவ்வி கண்டவர்:
**குலசிங்கம் கிலசன்**
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை



# பேசும் பேனாக்கள்



ஆக்கம் :-
நிலாத்தோழி
பரீனா பின்த் இஷ்ஹாக்

வருடங்கள் மாறினாலும், வாசிப்பின் வெளிச்சம் மட்டும் மாறாமல் துணிந்தெழு சஞ்சிகை நாமம் தாங்கி பயணித்துக் கொண்டே இருக்கிறது.

அந்தப் பயணத்தின் இன்னொரு அழகான மைல் கல்லாக இந்த 45-ஆவது துணிந்தெழு சஞ்சிகை வெளிவருகின்றது.

"ஒரு புத்தகம் எப்போதும் இரு மனிதர்களை உருவாக்குகிறது - ஒருவன் அதை எழுதுபவன், மற்றொருவன் அதை வாசிப்பவன்"

இந்தக் கூற்றுக்கமைய படைப்பாளர்களின் எண்ணங்கள், அனுபவங்கள், கற்பனைகள், சிந்தனைகள் என்பன வாசகர்கள் தங்கள் உள்ளத்தில் எதிரொலிக்கச் செய்யும் தருணங்கள் தான் ஒரு சஞ்சிகையின் உண்மையான வெற்றியாகும்.


இப்பகுதியில் பல்வேறு துறைகளில் செயல்படும் எழுத்தாளர்களின் நூல்களின் அறிமுகங்கள் வாசகர்களை தேடிச் செல்கின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நாம் தினசரி ஓடிக் கொண்டிருக்கும் வாழ்க்கையில் ஒரு சிறு நிமிடம் நின்று ஏதோ ஒன்றை உணர்ந்து பார்க்க வைக்கும் சக்தி புத்தகங்களுக்கே சொந்தமானது. அந்த சக்தியை வாசகர்களிடம் கொண்டு சேர்க்கும் ஒரு சிறப்பான முயற்சியாகவே இது திகழ்கிறது.

நீங்களும் உங்கள் வாசிப்பு அனுபவங்களை அல்லது நீங்கள் பரிந்துரை செய்ய நினைக்கும் நூல்கள் பற்றிய குறிப்புகளை அனுப்பி வைக்கலாம். அத்தோடு உங்கள் நூல்கள் பற்றி எமது சஞ்சிகையில் பிரசுரம் செய்ய விரும்பினால் உங்களின் நூல்களை தபால் மூலமாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.

நூல்களை தபால் மூலமாக அனுப்பி வைக்க:

**துணிந்தெழு சஞ்சிகை,**
**பேசும் பேனாக்கள் பகுதி,**
**எம்.ஜே.ஜவ்சன் அஹமட்**
***148,வீசி வீதி, பெரிய நீலாவணை-02***
**மருதமுனை, கல்முனை.**
***0760200387***




01

# நூல் : இப்படியும் ஒரு காலமிருந்தது

**நூலாசிரியர் : சி.மௌனகுரு**
**பதிப்பகம் : மொழி பதிப்பகம்**
**விலை : 1250/=**

மஞ்சோனா மரத்தடியில் புல்லுப் பாய் விரித்து எனது உம்மம்மா கதை சொல்லித் தாலாட்டுவது போலான மொழிநடை. வித்துவச் செருக்கு இல்லாத வசனங்கள். நின்று நிதானித்து வாசிக்கலாம். குழந்தைகளும் கூட. கச்சான் உருண்டையை பிட்டுப் பிட்டு கையில் வைக்கிறார். தொண்டையில் சிக்காமல் இருக்க.

என்னைக் கேட்டால் சிறுவர்களுக்கான நன்னெறிக் கதைகள், ஈசாப் நீதிக் கதைகள் வரிசையில் பேராசிரியர் மௌனகுரு ஐயாவின் "இப்படியும் ஒரு காலமிருந்தது" எனும் வாழ்வியல் கதையும் சேர்க்கப்பட வேண்டும் என்று சொல்லுவேன். ஒரு பாட்டன் தனக்குப் பின்னரான தலைமுறையினருக்கு சொல்லும் கதை இது. இங்கு பேராசிரியர், பக்கத்திற்குப் பக்கம் எனது மூத்தப்பாவை நினைவுபடுத்துகிறார்.

புத்தகத்திற்கும் திரைப்படத்திற்கும் ஏடாகூடமாக ஏதாவது தலைப்பு வைத்தால்தான் இரண்டுமே செல்லுபடியாகும் எனும் எண்ணத்தினை உடைக்கிறார் பேராசிரியர். அவர் நல்லவற்றையே பேச விரும்புகிறார். அதனால்தான் என்னவோ அவர் அருந்திய ஒவ்வொரு சாதாரணத் தேனீர்க் கோப்பைகளையும் இங்கு அமிர்தமாய் மாற்றி விடுகிறார். கொத்து ரொட்டி, பலகாரங்கள், ஆட்டுக்கால் சூப், ஏலக்காய் பிளேன்டீ என சுவையான உணவுகளாலும் இன மத பேதம் அற்ற உறவுகளாலும் தனது வாழ்பனுபவங்களை சேமித்திருக்கிறார். எவ்வளவு பெரிய பாக்கியம்!

மம்மது கடை, கச்சிக்காக்கா, கிறீன் காக்கா, வினாசிப் பரிசாரியார், ஈசிப்பாசியார் எனும் பாத்திரங்கள் பேராசிரியரின் வாழ்வில் மட்டுமல்ல, நம்மிடையேயும் இருந்தனர். ஆனால் அவற்றை நாம் நமது அடுத்த தலைமுறைக்கு சொல்ல மறந்து விடுகிறோம். குரோதங்களையும் துரோகங்களையும் பேசிப்பேசி வளர்க்கிறோம். பிஞ்சு உள்ளங்களில் அவை வேரூன்றி வளர்கிறது. அதனால்தான் மௌனகுரு ஐயா,

வேற்றுமைகளை பேசுவதைக் குறைத்து ஒற்றுமைகளைப் பேச வேண்டிய காலம் இது என்கிறார்.

பேசுங்கள். இன்னும் இருப்பவர்கள் பேசுங்கள். பேசப்படாத இதுபோன்ற உண்மைக் கதைகளை பேசுங்கள். அவை, வளரும் தலைமுறையினரின் உள்ளங்களில் "அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் அழகான உறவொன்று இருந்தது" என்பதை சொல்லட்டும்.

நிச்சயமாக இப்புத்தகத்தில் உங்கள் தாத்தா உங்களுக்கு "நாங்க எல்லாம் அந்தக் காலத்துல....." என்று தொடங்குவது போல மௌனகுரு ஐயா கதை சொல்வார். கேளுங்கள். நீங்களும் சொல்லுங்கள்.




## நூல் :
## கறுப்பி (குறுநாவல்)

**நூலாசிரியர் : நபீல் அபாபீல்**

**பதிப்பகம்:** student publication

**விலை :300/=**

மிகுந்த வேலைப்பளுவுக்கு நடுவே கை வந்து சேர்ந்தது "கறுப்பி." கொஞ்ச நாளாகவே வாசிப்பு என்னை விட்டு தூரம் ஆகியதாக ஓர் எண்ணம். அதனால் தான் என்னவோ கறுப்பி நாவலை கண்முன்னே படும்படி மேசை ஒன்றின் மீது போட்டு வைத்தேன். எப்படியும் வாசிக்காமல் கடக்க முடியாது. தலைப்பிற்கும் நமக்கும் உள்ள பந்தம் அப்படி.

நூலாசிரியரின் நூல்களுள் வாசித்த முதல் நூல் இது. புத்தகத்தை அனுப்பும் முன்னே அவர் கூறிய வார்த்தைகள். "இப்போதுதான் நாவல் எழுதத் தொடங்கி இருக்கின்றேன். வாசித்து விட்டு நேர்மையான விமர்சனம் செய்தால் போதும். என்னைச் சுற்றியுள்ளவர்கள் புகழ் வார்த்தைகளை மட்டுமே பாடுகின்றார்கள்." இவ்வார்த்தைகள் இன்னும் ஆழமாக புத்தகத்தை வாசிக்க செய்தது.

முதலில் நூலாசிரியரின் வர்ணனைகளைப் பார்ப்போம். அட அவ்வளவு அழகு!

"ஒற்றைக்காகம் ஒன்று ஓயாமல் இருமிக் கொண்டிருந்தது..."

"உச்சி வானம் முழுக்க சுற்றிவந்த களைப்பில் ஒற்றை மேகம் ஒன்று தலைகீழாக குப்புறப் படுத்துக் கொண்டிருந்தது."

"சோற்றுப் பீங்கானிலிருந்து சிதறி விழும் சோற்றுப் பருக்கைகளை பொறுக்கிக் கொண்டு ஓடும் காகத்தை போல" இது போல நிறைய.

சொற்களைக் கோர்த்துக் கதை சொல்லும் பக்குவம் நபீலுக்கு வசப்பட்டுள்ளது. வாசகரை இழுத்து, இருத்திக் கொள்கிறார். நாவலில் வரும் கதாபாத்திரங்கள் எதுவும் மிகைப்படுத்தப்படவில்லை என்பதே மிகப்பெரும் ஆறுதல். சாதாரணமாக நம் வாழ்வில் கடந்து போகும் பாத்திரங்கள்தான். அதனால்தான் ஒவ்வொன்றும் யார்யாரையோ நினைவுக்குள் கொண்டு வருகிறது. வாசிப்பவரோடு நாவல் ஒன்றித்துப் போகும் புள்ளியும் அதுவே!

நெஸ்டமோல் நிறத்து குளம், குட்டியே போடாத மயிலிறகு, வேண்டுமென்றே போய் மையவாடிக்குள் விழும் பட்டம், சேலையில் பிடிக்கும் மீன், உம்மம்மாவால் திரும்பத் திரும்பச் சொல்லப்படும் ஒரு நீதிக்கதை, கூட்டத்தின் ஒரு கதைசொல்லி, சிக்குப் பிடித்த தலைமுடி, கவிதையாய் ஒரு கூட்டாஞ்சோறு, ஜீனத்தும்மா, ஒட்டு மொத்த சக்தியையும் ஓய்வறையில் செலவிட்ட பின் வகுப்பறைக்கு களைத்துப் போய் வரும் ஆசிரியர்கள் என எல்லாமே நமக்குப் பரிச்சயமானவை.

பழைய பல நினைவுகளை கிளறி விடுகிறது நாவல். நான் இனாயாவைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்ததால் என்னவோ சில பக்கங்களில் அவளைக் காணாமல் தேடினேன். ஆனால் இறுதிப் பக்கங்களில் அவள் ஒய்யாரமாக நடந்து வந்து சிம்மாசனத்தில் அமர்கிறாள்.

"ஹப்பாடா"எனும் பெரும் மூச்சொன்று என்னை அறியாமல் வந்து போனது. நபீல் முதல் நாவல் என்றீர். நல்ல முயற்சி. மேலும் எழுதுங்கள். உங்களுக்கான ஒரு வாசகர் வட்டத்தை உருவாக்கும் யுக்தி உங்களது எழுத்துக்களில் உண்டு. பொய்யாகச் சொல்லவில்லை. நாவலில் வரும் சப்ரானைப் போல நீங்களும் ஒரு நல்ல கதைசொல்லி நிஜவாழ்வில் எங்களுக்கு.


# எனது விழிகள்

## கருப்பொருள் : பறவைகள்

### இம்மாத சிறந்த புகைப்படம்



றாஸீம் – மூதூர்



ஸைனப் மில்பர் – மாவனல்லை



நுபைல் அகமட் – நிந்தவூர்



பஹ்மான் பர்ஹான் – உக்குவளை



பிரவித் மித்ரன் – கத்தார்



றிப்கா அன்சார் – சாய்ந்தமருது



பாத்திமா நஸ்ரியா – திருகோணமலை

# மது ஒழிப்பு – மனித வாழ்வின் ஒளி



களிப்பென வந்தது களிம்பு
வாழ்வை விழுங்கும் கருங்கடல் அது
அன்பின் குடும்பம் சிதறும்
கனவுகள் சாம்பலாகும்

மதுவின் பானம் நஞ்சமென
மனித மனதை மயக்கமென
தந்தை அழிவும்
தாய் துயரும்
பிள்ளை கண்ணீர் சிந்தும்
ஒளி தரும் பாதை ஒன்றே
ஒழிப்பு தான் வாழ்வின் வெற்றியே
அன்பு தரும் கைகள் பிடித்தால்
அமைதி மலரும் உலகமெங்கும்

மது இல்லா நாளை நோக்கி
மனிதம் நடந்திட வேண்டும்
உலகம் நிம்மதி பாடட்டும்
நம் வாழ்வு சுதந்திரம் காணட்டும்.

கவிஞர்.
பாத்திமா சுபியானி (JP)
புத்தளம்

# தொலை தூரம்



இருள்களால் சூழ்ந்த
இந்தத் தேசத்தில் தான்
நட்சத்திரங்கள் பூத்துக்
குலுங்குகின்றன
வெள்ளிக் கடலில்
நிலவும் நீந்தப் பழகிக்
கொள்கிறது...

எங்கெங்கோ மறைந்த
விச ஜந்துக்கள்
ஊரத் தொடங்குகின்றன

இந்த இரவையும் இருளையும்
தூர வைத்துப்
பார்க்கும் போதுதான்
நல்லதும் தீயதும்
பிரிந்து கண்களுக்கு
விருந்தாகின்றன...

இப்படித்தான் ஒவ்வொரு
தொலைதூரமும்
உணர்வுகளுடன்
பேசிக் கொண்டிருக்கின்றது
உயிர் கொடுத்து...

தொலைவின் வலிகளில்
தொடர்பு நெருங்கிக்
கொள்கிறது
தொல்லை நீங்கி
துரத்தல்களை எடுத்துக்
கொள்கிறது
இந்தத் தேசமெங்கும்....

எஸ். எம். பெனாஸிரா,
முஸ்லிம் ஹல்மில்லாவ.




# சுற்றுலா பயணிகளை அதிகம் கவரும் தெமதுர ஒன்பது வளைவு புகையிரதப் பாலம்

# “NINE ARCH BRIDGE”



இலங்கையின் மத்திய மலைநாட்டில், பதுளை மாவட்டத்தில் உலக பிரசித்தி பெற்ற சுற்றுலா தளங்களில் ஒன்றான தெமதுர புகையிரதப் பாலம் சுமார் ஒன்பது வளைவுகளை (Nine Arch Bridge), பிரிட்டிஷ் காலனித்துவ பொறியியலின் ஒரு அற்புதமான சான்றாகும். “வானத்தில் உள்ள பாலம்” (Bridge in the Sky) அல்லது சிங்களத்தில் “அஹஸ் நமயே பாலம” (Ahas Namaye Palama - ஒன்பது வானங்களின் பாலம்) என்றும் அழைக்கப்படும் இது, சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபலம் அடைந்துள்ள ஓர் வரலாற்று சிறப்புமிக்க இடமாகும்.

இந்த பாலத்தின் அமைவிடம் எல்ல (Ella) மற்றும் தெமதுர (Demodara) ரயில் நிலையங்களுக்கு இடையில், பசுமையான மலைகள் மற்றும் தேயிலைத் தோட்டங்களுக்கு மத்தியில் அமைந்துள்ளது.

இப்பாலம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 3100 மீட்டர் உயரத்தில் காணப்பட்டாலும் சுமார் 91 மீட்டர் (300 அடி) நீளமும், 7.6 மீட்டர் (25 அடி) அகலமும், அதிகபட்சமாக 24 மீட்டர் (80 அடி) உயரமும் கொண்டது.

இதில் ஒரு வளைவேனும் கொங்ரீட்டுகளையோ, மீள் வலுவூட்டல் கம்பிகளையோ அல்லது வேறு எந்த வலுப்படுத்தும் கருவிகளையோ பயன்படுத்தாமல், மூலப் பொருட்களையோ கொண்டு கட்டி எழுப்பப்படாமல் முழுக்க முழுக்க வெறும் (கருங்)கற்களையும் சீமெந்து சாந்துகளை மட்டுமே கட்டுமான பொருட்களாகக் கொண்டு சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது எனும் ஆச்சரியமான தகவல்களை நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்?

இன்று நாம் ஆங்காங்கே காணும் பெரிய இரும்பு கம்பிகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் பழமை வாய்ந்த புகையிரத பாலங்களைப் போலவே இருக்கக்கூடிய, அன்றும் எல்லே




மற்றும் தேமோதரயை இணைக்கும் பாலம் பிரித்தானிய (ஆங்கிலேயே) காலனித்துவ பொறியியலாளர்களால் 1921ம் ஆண்டு வடிவமைக்கப்பட்டு கட்டுமான பணிகளும் தொடங்கி வைக்கப்பட்டிருந்தன. இரு மலைகளுக்கும் இடையேயான தூரங்கள், ஆழம் போன்ற புவியியல் காரணிகளாலும் இரண்டாம் உலக யுத்தத்தின் தாக்கம் போன்ற புறக் காரணிகளாலும் அதற்கான மூலப் பொருட்களையும் திட்டமிட்டபடியாக பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தினால் பலமிக்க இரும்புப் பாலத்தை கட்டமுடியாத நிலையில் பிரித்தானிய பொறியியலாளர்கள் தடுமாறி நின்றனர்.

இனியும் இது சாத்தியமில்லை என்று பிரித்தானிய பொறியியலாளர்கள் கைவிட எண்ணிய தேமோதரை புகையிரதப் பாலம் அன்றைய இலங்கையின் உள்ளூர் கட்டுமான வேலைகள் செய்து வருபவரும் நடனக் கலைஞருமான P.K.அப்புஹாமி என்பவரது பொறியியல் நுட்ப சிந்தனையால் துளிர்விட ஆரம்பிக்கிறது. வெலிமடையில் கெப்பட்டிபொல பிரதேசத்தில் வாழ்ந்த பி.கே.அப்புஹாமி என்ற மனிதரைப் பற்றி மிகவும் பிரபலமான கதை சொல்லப்படுகின்றது. 1870ல் பிறந்த இவர் ஒரு தடவை நடனப்போட்டியில் பங்கு பற்றி தோல்வியடைந்த தருவாயில் தனது வீடு சென்றிருக்கும் போது அப்புஹாமியை ஒரு பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் சந்திக்கின்றார். ஆரம்பத்தில் நடன உடையில் இருந்த அப்புஹாமி மிகவும் கோமாளித்தனமாகவும் பார்ப்பதற்கு பயங்கரமாகவும் காட்சியளித்தார். அதனால் அந்த அதிகாரி அவரைக் கண்டு பயந்து போனார். காலப்போக்கில் அது அவர்கள் இருவரிடையே நட்பாக மாறியது. அப்போது பிரிட்டிஷ் அதிகாரி ரயில் பாதை அமைக்கும் விடயங்கள் தொடர்பாக அப்புஹாமி அவர்களிடம் எடுத்துரைத்தார். அதற்கு அவர் உறுதுணையாக உள்ளூர் கிராம தொழிலாளர்களையும் கட்டுமான பணிக்காக அழைத்து வந்தார்.

வெற்று கற்களையும் சீமெந்துகளையும் கொண்டு மிகவும் உறுதியான ஒன்பது வளைவுகளை அமைத்து பாலத்தை பூரணப்படுத்துதல் எனும் பொறியியல் தொழில்நுட்பம் பொறியியலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படவே மிக பிரம்மாண்டமான கட்டுமான அமைப்பாகவும், இருபதாம் நூற்றாண்டின் கட்டிடக்கலைகளில் மற்றும் பொறியியல் திறமைக்கு மாபெரும் சான்றாகவும் ஒன்பது வளைவுப்பாலம் (Nine Arche Bridge) இலங்கையில் 20ம் நூற்றாண்டின் முன் பகுதியில் துளிர்விட்டு நிற்க ஆரம்பிக்கிறது. அதுவும் இவ் இலங்கை கட்டிட கலைஞன் மிகவும் குறைந்த செலவிலேயே இப்பாலத்தை கட்டி முடித்தார். இவரின் திறமையை கண்டு







ஆங்கிலேயரும் திகைத்தனர். நிறைய பேருக்கு எப்படி கொங்ரீட்டோ அல்லது மீள் வலுவூட்டி கம்பிகளோ இல்லாமல் சுமார் 100 அடி உயரமான, 25 அடி அகலமிக்க, 300 அடிக்கும் மேலான நீளமுடைய, அதுவும் இரு மலைகளுக்கு நடுவில் இப் பெரும் பாலத்தை அமைக்க முடியும் எனும் சந்தேகம் எழலாம். கட்டுமான பொறியியல் துறையில் அதிகம் தாக்கம் செலுத்தும் பொறியியல் கருத்துக்களில் (Engineering Concepts) வளைவு கட்டுமான கருத்து (Curve or Arch Structures) பண்டைய காலம் தொட்டு பயன்பாட்டில் இருந்து வந்துள்ளமை இக்கட்டுமான பணிகளில் உணரலாம். எவ்வித சுமைகளையும் விசைகளையும் இலகுவாக தாங்கக்கூடிய, நீளமான இடைவெளியை (Span) பெற்றுத் தரக்கூடிய அமைப்பாக இக்கட்டுமான எண்ணம் உள்ளது. இக்கட்டுமானத்தில் அமைக்கப்படும் வளைவுகளே அதன் மிகப் பெரும் பலம் ஆகும். எப்படி கொங்ரீட்டு கட்டுமானங்களுக்கு மீள் வலுவூட்டல் கம்பிகள் பலமாக அமைகிறதோ அதே போன்றே இங்கு ஏற்படுத்தப்படும் பிரம்மாண்ட வளைவுகளே இப்படியான கட்டுமானங்களுக்கு பலம் சேர்க்கின்றன என்பது நிரூபணமாகின்றது. அதிகமாக பாலங்கள் கட்டுமான துறைகளிலும், அணைகள் கட்டுமான பணிகளிலுமே இவ்வளைவு கருத்து பெரும் பக்கபலமாக அமைகின்றன.

குறிப்பாக இதே போன்ற ஓர் பாலம் சுவிஸ் நாட்டிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. எமக்கு இதன் பெறுமதி தெரியாவிட்டாலும் பரவாயில்லை ஆனால் ஏனைய நாடுகளில் உள்ள சுற்றுலா பயணிகள் இதன் வரலாற்றை அறிந்து இதை பார்வையிட இலங்கையை நாடி வருகின்றார்கள்.

வளைவுகளின் வழியே ரயில் மெதுவாகச் செல்லும் காட்சியைக் காணவும், அதைப் புகைப்படம் எடுக்கவும் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகிறார்கள். பாலம் வழியாக ஒரு ரயில் கடந்து செல்லும்போது பார்ப்பது மறக்க முடியாத அனுபவமாக இருக்கும்.

உங்களுக்கு ஓர் சந்தர்ப்பம் அமைந்தால் இந்த பாலத்தை பார்வையிட சென்று வாருங்கள். அப்போது இப்பிரம்மாண்ட பாலத்தின் பொறியியல் விந்தையையும் கட்டுமான தொழில்நுட்பத்தின் ஆச்சரியத்தையும் சில மணிநேரம் நின்று நிதானித்து பார்த்து வியந்து வாருங்கள்.

எஸ்.ஐ.எம்.நிப்ராஸ் ( JP),
ஊடகவியலாளர்

# வீறு கொண்டெழு மனமே

வீறு கொண்டெழு மனமே!
இங்கு புதிதாக
எதுவும் இல்லை
யாவும்
புதைக்கப்பட்ட உண்மைகள் தான்

முடங்கிக் கிடந்தது போதும்
முப்பொழுதும்
உன் கற்பனைகள் கொண்டு
முக்காலத்தையும்
உன் முடிச்சில் வைத்திடு

புத்தக புழுவாய் இருந்தது போதும்
புத்தி கொண்டு
புலன்கள் அடக்கிடு
வீறு கொண்டெழுந்து
விண்ணையும் தொட்டிடு

அறியாமையிடம்
அடிமை ஆகாதே
அகிலத்தை அறிந்து
ஆளுமையுடன்
ஆட்சி செய்

பாதி வளர்ந்து எழு
பருவம் அடைந்து எழு
உலகம் புரிந்து எழு
உண்மை உணர்ந்து எழு
மனமே நீ வீறு கொண்டெழு

அப்பாவி அரிவை அவர்களை
அடக்கி ஆளும் ஆடவர்களிடம்
வினா எழுப்புவோம்

அநாதைகளை
அடிமை செய்யும் அரக்கர்களை
அடங்க வைப்போம்

அக்கினி பந்தம்
ஏற்றும் அநியாயக்காரர்களை
அடங்க வைப்போம்

அநியாய ஆட்சி புரியும்
அரசியல்வாதிகளை
ஆளுமை கொண்டு அகற்றுவோம்

எம் திசை திரும்பும்
தீவிரவாதிகளை
திக்கற்றவர்களாய் மாற்றுவோம்

கணக்கில்லாமல் களவு செய்யும்
கள்வர்களை
களை பிடுங்குவோம்

எம்மை வளைத்து ஒழிக்க நினைக்கும்
வஞ்சகர்களை
வாட வைப்போம்

வீறு கொண்டெழு மனமே!
அறியாமையினையும்
அஞ்ச வைக்கலாம்
கேள்விக்குறிகளையும்
கெஞ்ச வைக்கலாம்

வீச்சு அரிவாள் கொண்டு
வீச நினைப்பவர்கள்
வீதியால் செல்கின்றனர்
வீறு கொண்டெழு மனமே!
விடுதலைக்கு வீடு கட்ட வேண்டும்

பாரதியின் பா பாட வா
வள்ளுவன் வாக்கு கேட்க வா
கம்பன் கண்டவை
காண்போம் வா
மனமே நீ
வீறு கொண்டெழுந்து வா!

ஏமாற்றம் எச்சம் ஆகும் முன்பும்
தலைகுனிவு மிச்சம் ஆகும் முன்பும்
நாம் முந்திக்கொள்ள வேண்டும்

இலட்சியத்தோடு இறங்கி வா
வெற்றியோடு ஏறிப்போகலாம்

வீறு கொண்டு எழுந்து வா மனமே!
விடியலின் வெளிச்சம் எமக்கு விருந்து
ஆகட்டும்.

ஆக்கம்: றீஸா இல்மி,
அக்கரைபற்று.

# சிறுவர் பகுதி



## நீ வேண்டும்!.....



அன்பின் வடிவான
அன்னையே - நீ என்னை
பத்து மாதம் சுமந்தாய்,
உன் கருவறையில்
சுமையையே சுகமாய்
நினைத்தாயே!

உதிரத்தை பாலாக்கி
உணர்வுகளை உரமாக்கி,
உருவம் தந்தாய் எனக்கு
உலகமதில் வாழ்வதற்கு!

பசியால் அழுதால்
பரிதவித்துப் போவாயே,
பாலூட்டி சீராட்டி
படிப்புடன் பண்பாட்டையும்
கற்பித்தாயே!

ஏடு பிடிக்கும் முன் - எனக்கு
எழுத்தை ஊட்டினாய்,
ஓர் ஆசானாய்
படிப்பில் நான் உயர
ஏணியாய் உழைத்தாயே!

நான் வாழும் காலமெல்லாம்
வேண்டும் வரம் ஒன்றே,
அன்னையே நீ வேண்டும்
எப்போதும் எனக்கு
அம்மாவாய்!

ற. அம்மார் ஷாமிக்
தரம் - 09
அக் - அரசினர் முஸ்லிம்
ஆண்கள் வித்தியாலயம்
அக்கரைப்பற்று




ஜ. அபியா ஸைனப்
தரம் - 02
அக்-முஹம்மதியா கனிஷ்ட
வித்தியாலயம்
பள்ளிக்குடியிருப்பு

நி. பி(f)க்ரா
தரம் - 02
அக்/முஹம்மதியா கனிஷ்ட
வித்தியாலயம்
பள்ளிக்குடியிருப்பு



# அறிந்து கொள்வோம்



01) உலகின் மிகப்பெரிய கடல் எது?
- பசிபிக் பெருங்கடல்

02) மனித உடலில் மிக வலிமையான எலும்பு எது?
- தொடை எலும்பு

03) “ஒளி வேகம்” என்றால் என்ன?
- ஒளி ஒரு வினாடியில் 2,99,792 கிலோமீட்டர் தூரம் பயணிக்கும்.

04) “விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதர்” யார்?
- யூரி ககரின் ( 1961)

05) “கணினியின் தந்தை” என்று அழைக்கப்படுபவர் யார்?
- சார்ல்ஸ் பேபேஜ்

06) புவியின் வளிமண்டலத்தில் அதிகமாக காணப்படும் வாயு எது?
- நைட்ரஜன் (78%)

07) விசை மற்றும் இயக்கம் பற்றிய விதிகளை கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
- சேர் ஐசக் நியூட்டன்

08) சூரியனின் வெளிச்சம் பூமியை அடைய எத்தனை நிமிடங்கள் எடுக்கிறது?
- சுமார் 8 நிமிடங்கள் 20 வினாடிகள்

09) உலகின் நீளமான நதி எது?
- நைல் நதி

10) மனித மூளையின் நினைவாற்றல் பகுதியை என்ன என்று அழைப்பார்கள்?
- ஹிப்போகாம்பஸ்

சிறுவர் பகுதிக்கான
தொகுப்பு:
ஷிமாம் முஸ்தாக்

ச. சயான் அஹ்மத்
தரம் - 05
அக்/முனவ்வறா ஜூ னியர்
கல்லூரி
அக்கரைப்பற்று



# உன்னிச்சை இருநூறுவில் - வரலாறும் மக்கள் எதிர்நோக்கும் சவால்களும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள உன்னிச்சை இருநூறுவில் கிராமம், இயற்கை வளங்களும் விவசாய நிலங்களும் கொண்ட அழகிய கிராமம். கிழக்கு மாகாணத்தின் வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குள் அமைந்துள்ள இக்கிராமம் உன்னிச்சை குளத்தின் கரையோரத்தில் அமைந்துள்ளது.

## வரலாற்றுப் பின்னணி

1980களின் நடுப்பகுதியில் இலங்கையில் நிகழ்ந்த வடகிழக்குப் போரின் தாக்கம் பல கிராமங்களையும் மக்களையும் ஆழமாகப் பாதித்தது. அந்தப் போரின் விளைவாக, 1985 ஆம் ஆண்டு, உன்னிச்சை இருநூறுவில் கிராமத்தில் வசித்த முஸ்லிம் சமூக மக்கள் பாதுகாப்பிற்காக தங்கள் ஊரை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

சுமார் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கள் வீடுகள், நிலங்கள், பள்ளிவாசல்கள், பாடசாலைகள் ஆகிய அனைத்தையும் விட்டு வெளியேற்றப்பட்டார்கள். அந்த நாளிலிருந்து இக்கிராமம் பல ஆண்டுகள் வெறிச்சோடிய நிலமாகவே இருந்து வந்தது.

அமைதியும் வாழ்வாதாரமும் அழிந்தபோதிலும், மக்கள் மனங்களில் ஊர் மீதான பாசம் அணையவில்லை.

போரின் இருளில் மறைந்திருந்த கிராமம், நினைவுகளின் வழியே வாழ்ந்தது.

“ஒரு நாள் நம் ஊரை மீண்டும் அடையலாம்” என்ற நம்பிக்கையுடன் தலைமுறைகள் கடந்தன.

## மீள்குடியேற்றம்

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னர், 2009 ஆம் ஆண்டில், உன்னிச்சை இருநூறுவில் மக்கள் தங்கள் தாயகத்திற்குத் திரும்பினர். சிதைந்த வீடுகளையும் அழிந்த நிலங்களையும் முற்றிலும் புதிதாக மீள்கட்டும் பணியில் அவர்கள் ஈடுபட்டனர்.

## இது வெறும் குடியேற்றம் அல்ல - மறுமலர்ச்சி.

அவர்கள் மீண்டும் கட்டியெழுப்பிய முக்கிய அடையாளங்களில் ஒன்று முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசல். 35 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த பள்ளிவாசல் புனரமைக்கப்பட்டு, மக்களின் பிரார்த்தனைகளால் மீண்டும் உயிர் பெற்றது.
அந்த நாளில் உன்னிச்சை இருநூறுவில் மக்களுக்கு நம்பிக்கையும் பெருமையும் கலந்த மகிழ்ச்சி நிலவியது.

அன்றைய நாள் உன்னிச்சை இருநூறுவில் ஒரு புத்துயிர் பெற்ற கிராமமாக திகழ்ந்த போதிலும் இன்று பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது.

இக்கிராம மக்களின் பிரதான வாழ்வாதாரமான விவசாயம், கல்வி என்பன மீண்டும் அழிவை நோக்கி நகர்கிறது. மீண்டும் மக்கள் தங்களது பூர்வீக நிலங்களை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இப்பகுதியில் யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. பாடசாலைகளில் அடிப்படை வசதிகள் இல்லாததால் அடிப்படை கல்வி, மருத்துவம், போக்குவரத்து என்பன





















கேள்விக்குறியாகியுள்ளன. அடிப்படை வசதிகள், தொழில் வழிகாட்டல்கள் இல்லாததால் மக்கள் வாழ்வதற்கு பொருத்தமில்லாத கிரமமாக மாறிவிட வாய்ப்பு உள்ளது.

இம்மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் மற்றும் தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டல்கள் வழங்கப்படல் வேண்டும். அடிப்படை வசதிகள், மருத்துவம் மற்றும் கல்வி தேவைகள் உறுதி செய்யப்படுவதுடன், சகல வசதிகளுடனான பாடசாலையும் யானையின் ஆபத்தில் இருந்து மக்களையும் விவசாய நிலங்களையும் பாதுகாக்க தடுப்பு மின்சார வேலிகளும் அமைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மக்களின் போக்குவரத்துக்கு ஏற்ப வீதிகளை புனரமைக்க வேண்டும்.

இதுவே இக்கிராம மக்களின் எதிர்பார்ப்பாகவும் வேண்டுகோளாகவும் உள்ளது.

**தொகுப்பு:**
**எம்.பஹத் ஜுனைட்**
**செய்தி முகாமையாளர்**
**துணிந்தெழு சஞ்சிகை**



# லேப்டாப் சார்ஜரை எப்போதும் ஆன் செய்து வைத்தால் பாதிப்பா? உண்மை என்ன?



லேப்டாப்பை பயன்படுத்தும் பலர், அதற்கான சார்ஜரை எப்பொழுதும் ஆன் செய்து வைத்திருப்பதை வழக்கமாக வைத்திருக்கின்றனர்.

நம்மில் பலர் லேப்டாப்பை பயன்படுத்தும் போது சார்ஜ் குறைந்துவிட்டால், சார்ஜர் அடாப்டரை செருகிவிட்டு அதனை மறந்தவாறு விட்டு விடுவோம். இதனால் லேப்டாப் சார்ஜர் எந்நேரமும் இயக்க நிலையில் இருக்கும். ஆனால், இவ்வாறு செய்வதால் ஏதாவது பிரச்சனை வருமா என்ற சந்தேகம் பலருக்கு இருக்கலாம். அதனை இந்த பதிவு மூலமாக தெளிவுபடுத்துவோம்.

லேப்டாப்பை பயன்படுத்தும் பலர், அதற்கான சார்ஜரை எப்பொழுதும் ஆன் செய்து வைத்திருப்பதை வழக்கமாக வைத்திருக்கின்றனர். ஆனால், இது மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடிய ஒரு செயலாக அமைகிறது என்று சொல்லப்படுகிறது. அந்த வகையில் ஆன்லைனில் வெளியான சமீபத்திய பதிவு ஒன்றில் ஒரு நபர் லேப்டாப்பை சார்ஜிங் செய்வதுபோல ஒரு புகைப்படத்தை ஷேர் செய்து, அது தொடர்பான ஒரு கேள்வியையும் எழுப்பி இருக்கிறார்.

இந்த எளிமையான பதிவு நூற்றுக்கும் மேற்பட்ட பதில்களைப் பெற்று வருகிறது. பலர் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு வருகின்றனர். மேலும், தற்போது வரக்கூடிய நவீன லேப்டாப்புகள் பவரை எப்படி நிர்வகிக்கிறது என்பது போன்ற தகவல்களையும் கூறியுள்ளனர்.

“தொடர்ந்து லேப்டாப் சார்ஜரை ஆன் செய்து வைத்திருப்பதால் பேட்டரிக்கு சேதம் ஏற்படுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. ஆனால், நான் இதனை இதுவரை





நேர்மாறாக நினைத்துக் கொண்டிருந்தேன்” என்று அந்த பதிவில் எழுதப்பட்டு இருந்தது. பல வருடங்களாகவே யூசர்கள் நம்பும் ஒரு விஷயம் இது. லேப்டாப் சார்ஜரை எந்நேரமும் ஆன் செய்து வைத்திருப்பதால் பேட்டரி சேதமடையலாம் என்பது பலரது நம்பிக்கை.

இதனை இவர் ஷேர் செய்த பிறகு மக்கள் தங்களுக்கு லேப்டாப் பேட்டரிகள் பற்றி என்னென்ன விடயங்கள் தெரியுமோ அதனை பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தனர். “தற்போது வரக்கூடிய பெரும்பாலான லேப்டாப்புகள் பேட்டரி முழுமையாக சார்ஜ் ஆனவுடன் நேரடியாக அடாப்டரில் இருந்து பவரை பயன்படுத்திக் கொள்கின்றன.ஒருவேளை நீங்கள் எப்பொழுதும் AC பவரில் உங்களுடைய லேப்டாப்பைப் பயன்படுத்தி வந்தீர்கள் என்றால் கிட்டத்தட்ட இது ஒரு டெஸ்க்டாப்பை பயன்படுத்துவது போல அமைகிறது” என்று ஒருவர் எழுதியிருந்தார்.

“ஒரு வருடத்திற்கு முன்பு என்னுடைய லேப்டாப் பேட்டரி பெரிதாகி விட்டது. எனவே, அதனை நான் அகற்றிவிட்டு, அதிலிருந்து நான் நேரடியாக AC பவரில் லேப்டாப்பை பயன்படுத்தி வருகிறேன். இதனால் எனக்கு எந்த ஒரு பிரச்சினையும் ஏற்படுவதில்லை” என்று எழுதியிருந்தார்.

லேப்டாப் சார்ஜரை எப்பொழுதும் ஆன் செய்து வைத்திருப்பதால் பேட்டரிக்கு எந்த ஒரு பிரச்சினையும் ஏற்படாது. பேட்டரியின் சார்ஜ் 100% அடைந்தவுடன் சார்ஜிங் செயல்முறை ஆட்டோமேட்டிக்காகவே நிறுத்தப்படும். “பேட்டரியின் ஆயுட்காலத்தை அதிகப்படுத்துவதற்கு அதனை 80 சதவீதம் வரை சார்ஜ் செய்வது போதுமானது. அதன் பிறகு அது நேரடியாக AC பவரில் இயங்க ஆரம்பித்துவிடும்” என்று ஒரு யூசர் எழுதியிருந்தார்.

தொகுப்பு:
**அஸ்ரி இப்னு அமீர்**
பிரதி முகாமையாளர்
துணிந்தெழு சஞ்சிகை



# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

## உங்கள் விளம்பரங்களையும்
## குறைந்த கட்டணத்தில்
## இப்போதே பகிர்ந்து கொள்ளுங்கள்

0757000791 | +97431060249

### துணிந்தெழு சஞ்சிகை மாத இதழை
### இலவசமாக Whatsappயில்
### பெற்றுக்கொள்ள




**Get the Issue of Thunindhuzhu Magazine for Free on WhatsApp**

**Say 'Magazine PDF' on: +97431060249**

https://magazine.skytamilnews.com

facebook.com/Thuninthelu instagram.com/skytamil.lk